2026 ஜூலை மாதம் 22– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 32/2021

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW13 (LW14 ) – வீரசேரன் |
| தகப்பனார் பெயர்: | வாலமுத்து |
| ஊர்: | இறங்காமணி |
| வட்டம்: | இராமநாதபுரம் |
| மாவட்டம்: | இராமநாதபுரம் |
| தொழில்: | ஜே.சி.பி. ஓட்டுநர் |
| வயது : | 46 |

22.07.2026

(1, 2, 3, 9 எதிரிகள் ஆஜர். 4 முதல் 8 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், இறங்காமணியில் வசித்து வருகிறேன். நான் ஜே.சி.பி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். நான் இராமநாதபுரம், முத்துப்பேட்டையில் வேலை செய்து கொண்டிருந்தேன். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னர் 29.02.2020ம் தேதி சுமார் 12 மணியளவில் கிராம நிர்வாக அலுவலர் எனக்கு அலைபேசியில் அழைத்து வேலை இருப்பதாக சொன்னார். நான் முத்துப்பேட்டையில் வேலை செய்துக் கொண்டிருந்தபோது, என்னை கிராம நிர்வாக அலுவலர் அழைத்தார், நான் ஜே.சி.பி–யை எடுத்துக்கொண்டு முத்துப்பேட்டையில் அருகில் மட்டைவிரிச்சி வேலி அருகில் என்னை தோண்ட சொன்னார்கள்.

2. நான் அந்த இடத்தை TN 49 AE 2019 என்ற பதிவெண்கொண்ட ஜே.சி.பி–யை வைத்து பள்ளம் தோண்டினேன். தோண்டும்போது எலும்புக்கூடுகள் இருந்தன. எலும்புக்கூட்டை தோண்டி எடுத்தோம், கிராம நிர்வாக அலுவலர், தாசில்தார், போலீசார் மற்றும் பொதுமக்கள் ஆகியோர்கள் இருந்தார்கள். தோண்டி எடுத்த எலும்புக்கூட்டை சிறிது நேரம் கழித்து குழியில் போட்டு மூடிவிட்டு சென்றுவிட்டோம். எத்தனை அடி பள்ளம் தோண்டினோம் என்றால் 4 அடியாகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

3. கிராம நிர்வாக அலுவலர் என்னை அலைபேசியில் அழைத்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. மட்டைவிரிச்சி வேலி அருகில் தோண்டியதாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சேதுநகரில் சுமார் எத்தனை வீடுகள் உள்ளன என்றால் சுமார் 300 வீடுகள் இருக்கும். சேதுநகரில் இருந்து பொதுமக்கள் நான் தோண்டும்போது வந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு ஜே.சி.பி. ஓட்டுவதற்கு எனக்கு உரிமம் உள்ளதா என்றால் இல்லை.

4. TN 49 AE 2019 என்ற பதிவெண்கொண்ட ஜே.சி.பி யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு பாத்தியப்பட்டது, மேற்படி வண்டிக்கு பதிவுச் சான்று உள்ளதா என்றால் உள்ளது. போலீசார் விசாரணையில் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் 29.02.2020ம் தேதி மட்டைவிரிச்சி வேலி அருகில் நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. எலும்புக்கூடுகளை எடுத்து மண்ணை போட்டு மூடினேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 22.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.22 17:36:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
22.07.2026